03.02.2025

அசல் வழக்கு எண்: 29/2022

வா.சா.4 சாட்சி செல்வம் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் எந்த ஊரில் வசித்து வருகிறேன் என்றால் பெருமாள்பட்டியில் வசித்து வருகிறேன். வழக்கு விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது அப்பாவிற்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து. ஆனால் எனது அம்மா பெயரில் உள்ளது. எனது அப்பா பெயரில் பட்டா எதுவும் இருந்ததா என்றால் இல்லை.

தாவா சொத்தை செல்வத்திற்கு நான்தான் கிரையம் எழுதிகொடுத்தேன் என்றால் சரிதான். யார் யார் கிரையம் கொடுத்தோம் என்றால் நான், எனது அம்மா பூச்சம்மாள், எனது தங்கை, எனது தம்பி மற்றும் எனது அக்கா ஆகியோர்கள் எழுதிகொடுத்தோம். கிரையம் எழுதிகொடுத்த சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. எந்த தேதியில் கிரையம் எழுதிகொடுத்தேன் என்று தெரியுமா என்றால் 10 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. அதனால் ஞாபகம் இல்லை.

எனது தகப்பனார் பொன்னையாநாயக்கர், தாயார் பூச்சம்மாள் ஆகியோர்கள் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். எனது அப்பா எத்தனை வருடங்களுக்கு முன்பாக இறந்தார் என்றால் நான் சிறு வயதாக இருக்கும்போதே இறந்துவிட்டார். எனது அம்மா எப்போது இறந்தார் என்றால் சுமார் 4 வருடங்களுக்கு முன்பாக இறந்தார். எனது அப்பா மற்றும் அம்மா இறப்பு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எனது அம்மாவினுடைய வாரிசு சான்றிதழை வாங்கியுள்ளேனா என்றால் வாங்கவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 1 பட்டாவை பார்த்துள்ளேனா என்றால் பூர்வீக சொத்து என்பதால் பட்டா பார்த்ததில்லை. வா.சா.ஆ. 1 ஆவணத்தில் பூச்சம்மாள்

கணவர் பெயர் பெருமாள்நாயக்கர் என்று உள்ளது என்றால் சரிதான். ஆனால் அவரை கூப்பிடுவது பொன்னையாநாயக்கர் என்று கூப்பிடுவார்கள். வா.சா.ஆ. 1 ஆவணம் பூச்சம்மாள் பெயரில் தனிப்பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 2 ஆவணத்தில் எனது கையெழுத்து உள்ளதா என்றால் கையெழுத்து உள்ளது. எந்த கையெழுத்து என்னுடையது என்றால் இடதுபுறத்தில் உள்ள 3வது கையெழுத்து என்னுடையது ஆகும். வா.சா.ஆ. 2 ஆவணத்தில் 1வது நபர் பெயரால் கூட்டுப்பட்டா எண்.462 என வாசகம் உள்ளது என்றால் சரிதான். கூட்டுப்பட்டா எண்.462 கிரையம் வாங்கிய நபரிடம் கொடுத்தேனா என்றால் ஞாபகம் இல்லை. அவ்வாறு ஒரு கூட்டுப்பட்டா இல்லை என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ. 2 ஆவணத்தில் யார் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் செல்லம் மகன் வேல்முருகன் மற்றும் தங்கம் என்பவர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார். மேற்படி வேல்முருகன் என்பவர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள குமாரம்மாள் மற்றும் பவர் ஏஜென்ட் செல்லம் என்பவருடைய மகன் என்றால் சரிதான். செல்லத்திற்கு எழுதிகொடுத்தது பவர் பத்திரமா அல்லது கிரைய பத்திரமா என்றால் தெரியாது.

நான் எழுதிகொடுத்த வா.சா.ஆ2 ஆவணத்தில் விஸ்தீரணம் மொத்தம் 35 செண்டு எழுதிகொடுத்துள்ளோம். மீதமுள்ள 35 செண்டு என்வசம் உள்ளது. அதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எவ்வளவு தொகை கிரையம் கொடுத்தோம் என்றால் கிரைய தொகை எனது அம்மாவிடம் கொடுத்தார்கள். ஆனால் எவ்வளவு என்று எனக்கு தெரியாது. பொதுவாக ரேசன் கார்டு, வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் கார்டு, தேர்தல் வாக்கு ஜாபிதா போன்றவையில் ஆண்கள் என்றால் தகப்பனார் பெயரும், பெண்கள் என்றால் கணவர் பெயரும் குறிப்பிடப்படும் என்றால் சரிதான். எனது ஆதார் அடையாள அட்டை மற்றும் குடும்ப அட்டையில் எனது

அப்பா பெயர் என்ன உள்ளது என்றால் பொன்னையாநாயுடு என்று உள்ளது. வா.சா.ஆ1 ஆவணத்தில் உள்ள பூச்சம்மாள் என்பவருக்கும் எனது அம்மாவிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள பூச்சம்மாளுக்குதான் தாவா சொத்து பாத்தியப்பட்டது என்றாலும் எனது அம்மாவிற்கு பாத்தியப்பட்டது இல்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ. 1 முதல் வா.சா.ஆ3 வரையிலான ஆவணங்கள் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றாலும் நானும் எனது தாயாரும் எனது உடன் பிறந்தவர்களும் கூட்டு சதி செய்து மேற்படி ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ2 மற்றும் வா.சா.ஆ3 ஆவணங்கள் செல்லத்தக்க ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. வாதி எனது உறவினர் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.